# பெரும்தேவி தாயார்



பெரும்தேவித்தாயே ! உன்னை அடைந்தவர்.

வரும்துயர் தீர்த்து அவர்களை காப்பாய்நீயே!

பெரும்தேவி.......

சத்தியவிரத க்ஷேத்திரத்தில் எம்பெருமானுடன்,

சத்தியத்தைக் காத்திட நிற்கும் எங்கள் தேவியே;
அத்திகிரி மலைமீது இன்று நிற்கும் கரிவரதனின்,

பத்தினியாக அங்கு உறைகின்ற எம் தாய்நீயே!

பெரும்தேவி......

தினம் பக்தி சிரத்தையுடன் வலம்வந்து,

தனம் வேண்டி உன்னைத் துதிப்பவர்க்கு;

மனம் போல் நீயும் அவர்களின் குறைதீர,

தனம் மழைபோன்று பொழியச்செய்வாயே!

பெரும்தேவி...........